தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக

# செய்தி மடல்

செய்தி 17 மடல் 1 ஜனவரி – 2017 ₹1.00

## துணைவேந்தர் அவர்களின் வாழ்த்துச் செய்தி

**அன்புள்ள வாசகர்களே!**

**என் இனிய, வளமான புத்தாண்டு மற்றும் பொங்கல் நல்வாழ்த்துகளை** உங்கள் அனைவருக்கும் முதலில் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தப் புத்தாண்டு உங்கள் அனைவருக்கும் மகிழ்ச்சி, முன்னேற்றம், அமைதி மற்றும் நல்ல உடல் ஆரோக்கியத்தை வழங்கட்டும்.



கடந்த 2016ஆம் ஆண்டில் கல்வி, ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கத்தில் நாம் குறிப்பிடத் தக்க மற்றும் அங்கீகரிக்கத் தக்க முன்னேற்றத்தை அடைந்திருக்கிறோம் என்று சொல்வதில் நான் பெருமையடைகிறேன். மத்திய அரசின் மனித வள மேம்பாட்டு அமைச்சகத்தின் தேசியக் கல்வி நிலையத் தரவரிசைப் பட்டியல்படி நாட்டில் உள்ள 12 மாநிலக் கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகங்களிடையே நம் பல்கலைக்கழகம் முதலிடம் பெற்றிருக்கிறது. மேலும், நம் பல்கலைக்கழகம் நாட்டில் உள்ள சிறந்த 50 பல்கலைக்கழகங்களில் 36ஆவது இடத்தையும், மாநில அளவில் 3ஆம் இடத்தையும் வகிக்கிறது. நம் பல்கலைக்கழகம் கால்நடை மருத்துவ அறிவியல் புலத்தில் கல்வி, ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கம்சார்ந்த மதிப்பீட்டில் உயர்ந்த இடத்தைப் பெற்றிருப்பது இப் பல்கலைக்கழகத்தின் பல்வேறு செயல்பாடுகளின் தொடர் நடவடிக்கைளின் பிரதிபலிப்பே ஆகும். 2016ஆம் ஆண்டில் இணையவழி இளநிலை மற்றும் முதுநிலைப் பட்டப் படிப்புகளுக்கான சேர்க்கையை அறிமுகப்படுத்திய நம் பல்கலைக்கழகம், இந்தியாவில் உள்ள கல்வி நிலையங்களில் முதன்முதலாக ஜிஎல்பி – தரமான தூய்மை ஆய்வக வசதியை ஏற்படுத்தியுள்ளது. மேலும், விலங்குகளுக்கான ஸ்டெம் செல் ஆராய்ச்சி மையம் மற்றும் நானோ தொழில்நுட்ப மையத்தையும் ஏற்படுத்தியுள்ளது. தேசிய வேளாண் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் மொத்த நிதி ரூபாய் 629.91 லட்சத்தில் ‘‘தமிழ்நாட்டின் கற்பித்தல் கால்நடை மருத்துவமனைகளில் நோய்கண்டறியும் உபகரணங்களை வலுப்படுத்தல்’’, ‘‘நீடித்த கால்நடை வளர்ப்பிற்குப் பண்ணைக் கருவிகள்/சாதனங்கள் உருவாக்கப் புதிய கண்டுபிடிப்புகள் மற்றும் கருவிமயமாக்கல் மையத்தை ஏற்படுத்தல்’’, ‘‘கால்நடை மருத்துவத் தடய அறிவியல் ஆய்வகத்தை ஏற்படுத்தல்’’ ஆகிய மூன்று புதிய நிதியுதவித் திட்டங்களுக்கு 2016–17ஆம் ஆண்டில் பல்கலைக்கழகத்திற்குத் தமிழக அரசால் இசைவாணை வழங்கப்பட்டுள்ளது.

கல்வி மற்றும் ஆராய்ச்சியில் பல்கலைக்கழகம் சிறந்த இடத்தை வகிப்பதோடு பண்ணையாளர்களுக்குச் சேவையளிப்பதையும் முதன்மையான குறிக்கோளாகக் கொண்டுள்ளது. ஈரோட்டில் 18.09.2016, 19.09.2016ஆம் தேதிகளில் ‘‘இலாபகரமான கால்நடை மற்றும் கோழி வளர்ப்பிற்குக் குறைந்த விலையிலான புதிய தொழில்நுட்பங்களைப் பிரபலப்படுத்துதல்’’ என்ற பொருளில் விலை குறைந்த புதிய தொழில்நுட்பங்கள் குறித்த கண்காட்சி மற்றும் பண்ணையாளர் தொழில்நுட்பப் பயிலரங்கிற்கு ஏற்பாடு செய்யப்பட்டு, கால்நடை மற்றும் கோழிப் பண்ணையாளர்கள் தின விழாவாகப் பல்கலைக்கழக நிறுவன நாள் கொண்டாடப்பட்டது. இதன்மூலம் 6,000க்கும் மேற்பட்ட பண்ணையாளர்கள் பயன்பெற்றனர். பண்ணையாளர்கள் நலன் கருதி, பண்ணையின் செயல்திறன் மற்றும் இலாபத்தை அதிகரிக்கப் பல்கலைக்கழகத்தின் புதிய கண்டுபிடிப்பு மற்றும் தொழில்நுட்ப மையத்தில் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் உருவாக்கிய 33 விலை குறைந்த புதிய பண்ணைக் கருவிகளைப் பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ளது. நமது நாட்டினமான பர்கூர் மாட்டினத்தைப் பாதுகாக்க ஈரோடு மாவட்டம், பர்கூரில் ‘‘பர்கூர் மாட்டின ஆராய்ச்சி மையமும்’’, ஊட்டச்சத்து நிறைந்த பசுந்தீவன உற்பத்தியை அறிமுகப்படுத்திப் பிரபலப்படுத்தும் நோக்கில் கால்நடைப் பண்ணை பயிலக வளாகம், மாதவரம் பால்பண்ணையில் மண் இல்லாப் பசுந்தீவன உற்பத்திப் பிரிவும் மற்றும் பண்ணையாளர்களைத் தொழில்முனைவோராக ஆக்கும் வகையில் பண்ணை உற்பத்திப்பொருள் விற்பனை மையமும், கால்நடை மற்றும் கோழிப் பண்ணைத் தீவனத் தேவைகளை எதிர்கொள்ளும் வகையில் ஒசூர், கோழியின உற்பத்தி மற்றும் மேலாண்மைக் கல்லூரியில் ‘‘கோழி மற்றும் கால்நடைத் தீவன உற்பத்திப் பிரிவும்’’ துவக்கப்பட்டுள்ளன.

**சிறந்த தலைவர்கள், தங்கள் மக்களுடன் தொடர்பு கொள்வதற்குத் தேவையான வழிமுறைகளைக் கண்டறிவதுடன் அவர்களின் முழு ஆற்றல்களையும் பயன்படுத்துவதற்கு உதவியாகவும் உள்ளனர்.**

––ஸ்டீவன் ஜெ. ஸ்டோவெல்

பல்கலைக்கழகத்தில் உலகத் தரத்திற்கு இணையாகக் கால்நடை நலம் மற்றும் மருத்துவச் சிகிச்சை வசதிகள் அளிக்கப்படுகின்றன. நாட்டிலேயே முதன்முதலாகத் தமிழ்நாட்டின் கிராமப் பகுதிகளில் உள்ள கால்நடைகளின் நலனுக்காக நடமாடும் கால்நடை மருத்துவ ஊர்திச் சேவை துவக்கப்பட்டுள்ளது. நேசப் பறவைகள், கிளி வகைகள், பெருங்கொண்டைக் கிளி, புறாக்கள், எலி வகைகள் போன்ற பறவை மற்றும் அயல்நாட்டினச் செல்லப்பிராணிகளுக்கு மருத்துவச் சிகிச்சை அளிக்கும் வகையில் ''பறவை மற்றும் அயல்நாட்டினச் செல்லப் பிராணிகள் பிரிவு'' புதிதாகச் சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியில் துவக்கப்பட்டுள்ளது. கால்நடை நோய் கண்டறிதல் சேவை அளிக்கும் வகையில் மதுரை, கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையமானது கால்நடை மருத்துவப் பயிற்சி மற்றும் நோய் கண்டறிதல் ஆய்வு மையமாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளது. மேலும், ஜோனீஸ் நோய்க்குக் காரணமான ''மைகோபாக்டிரியம் பாரடியுபர்குளோசிஸ்'' நுண்ணுயிரியின் முழு மரபணுக் கோர்வை வரிசைப்படுத்தல் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

புத்தாண்டு 2017 பிறந்திருக்கிற இவ்வேளையில் இப் பல்கலைக்கழகத்தின் அனைத்துப் பேராசிரியர்கள், பணியாளர்கள் மற்றும் விவசாயிகள் ஆகிய அனைவரும் ''தானுவாஸ் பல்கலைக்கழகக் குழுவோடு'' இணைந்து மிகவும் சிறந்த வழியில் வேளாண் சமூகத்தினருக்குப் பணியாற்ற உங்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கிறேன். பல்கலைக்கழகக் குழுவின் சார்பாக மீண்டும் உங்கள் அனைவருக்கும் **இனிய புத்தாண்டு மற்றும் பொங்கல் நல்வாழ்த்துகளைத்** தெரிவித்துக் கொண்டு, இப் பல்கலைக்கழகக் குழுவிற்கு எப்பொழுதும் ''பண்ணையாளர் சேவை முதலிடம்'' வகிக்கின்றது என்பதைத் தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொரு கால்நடை மற்றும் கோழிப் பண்ணையாளர்களுக்கு உறுதிப்படத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**நமது எதிர்காலம், நாம் இன்று செய்யும் செயல்களைப் பொறுத்தே அமைகிறது**

––மகாத்மா காந்தி

மேலான வாழ்த்துகளுடன்!

**முனைவர் சு. திலகர்**
துணைவேந்தர்
தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்

## பயிற்சிப் பட்டறை மற்றும் கண்காட்சி



பல்கலைக்கழகத்தின் கால்நடைப் பண்ணைப் பயிலக வளாகம்மூலம் ''நீடித்த கால்நடை வளர்ப்பிற்குப் பண்ணைச் சாதனங்களை உருவாக்கப் புதிய கண்டுபிடிப்பு மற்றும் தொழில்நுட்ப மையம் ஏற்படுத்துதல்'' குறித்த தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் ''விவசாயிகளுக்கான பண்ணைச் சாதனங்கள் குறித்த பயிற்சிப் பட்டறை மற்றும் கண்காட்சி'', மதுரை மாவட்டம், திருப்பரங்குன்றத்தில் 30.12.2016அன்று நடைபெற்றது. பயிற்சிப் பட்டறை மற்றும் கண்காட்சியை மாண்புமிகு தமிழ்நாடு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் திரு. பா. பாலகிருஷ்ணா ரெட்டி அவர்கள் துவக்கிவைத்துச் சிறப்புரை ஆற்றி, இளங்குஞ்சுகள் அடைக்காப்பான், எளிய முட்டைக்கரு சோதிப்பான், கோழிகளுக்கான சிறிய குடிநீர் கொதிக்கலன் தட்டு ஆகிய புதிய வகையான உபகரணங்களை முன்னோடிக் கால்நடைப் பண்ணையாளர்களுக்கு வழங்கினார். மதுரை மாவட்ட ஆட்சியர் திரு. கே. வீர ராகவ ராவ் இ.ஆ.ப. அவர்கள் நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்துத் தலைமையுரை ஆற்றினார். பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் நிகழ்ச்சியில் பங்கேற்று, திட்டத்தின் பல்வேறு செயல்பாடுகள் குறித்து விளக்கியுரைத்தார். முன்னதாக, கால்நடை உற்பத்திக் கல்வி மைய இயக்குநர் முனைவர் வே. ரமேஷ் சரவணகுமார் அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். கால்நடைப் பண்ணைப் பயிலக வளாகப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் பா. டென்சிங் ஞானராஜ் அவர்கள் நன்றியுரை ஆற்றினார். பயிற்சிப் பட்டறை மற்றும் கண்காட்சியில் மொத்தம் 200க்கும் மேற்பட்ட பண்ணையாளர்கள் பங்கேற்றுப் பயன்பெற்றனர். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை மதுரை, கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் நோய் கண்டறிதல் ஆய்வகம் மற்றும் மாதவரம், கால்நடைப் பண்ணைப் பயிலக வளாகத்தின் பேராசிரியர்கள் செய்தனர்.

## புதிய கண்டுபிடிப்பு மற்றும் தொழில்நுட்ப மையம் ஏற்படுத்துதல் தொடர்பான தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டம் குறித்த ஆய்வு

''நீடித்த கால்நடை வளர்ப்பிற்குப் பண்ணைச் சாதனங்களை உருவாக்கப் புதிய கண்டுபிடிப்பு மற்றும் தொழில்நுட்ப மையம் ஏற்படுத்துதல்'' குறித்த தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் மாதவரம், கால்நடைப் பண்ணைப் பயிலக வளாகத்தில் புதிய கண்டுபிடிப்பு மற்றும் தொழில்நுட்ப மையம் நிறுவப்பட்டுள்ளது. இம் மையத்தில் நடைபெறும் பல்வேறு பணிகளைச் சென்னை, தமிழ்நாடு வடிநில மேம்பாட்டு முகமையின் முதன்மைச் செயல்அதிகாரி/செயல் இயக்குநர் டாக்டர் ஆர். ஆனந்தகுமார் இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டு, இம்மையத்தில் உருவாக்கப்பட்ட பல்வேறு பண்ணைச் சாதனங்களைக் காட்டுப்பாக்கம், கால்நடை அறிவியல் முதுகலை ஆராய்ச்சி நிலையம் மற்றும் வேளாண் அறிவியல் நிலையம், காஞ்சிபுரம், உழவர் பயிற்சி மையம், வேலூர் மற்றும் விழுப்புரம், கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையங்களுக்கு வழங்குவதற்கான நடவடிக்கையைத் துவக்கிவைத்தார். மேலும், ஒருங்கிணைந்த பண்ணையப் பிரிவு மற்றும் குறைந்த விலையிலான மண்ணில்லாத் தீவன உற்பத்திப் பிரிவையும் பார்வையிட்டார். இந்நிகழ்ச்சியில் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் மற்றும்

பல்கலைக்கழக அதிகாரிகள் பங்கேற்றனர். கால்நடை உற்பத்திக் கல்வி மைய இயக்குநர் முனைவர் வே. ரமேஷ் சரவணகுமார் மற்றும் கால்நடைப் பண்ணைப் பயிலக வளாகப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் பா. டென்சிங் ஞானராஜ் ஆகியோர் மையத்தின் செயல்பாடுகளை விளக்கியுரைத்தனர்.

## இந்தியக் கால்நடை மருத்துவ அறுவைச் சிகிச்சை நிபுணர்களின் குழுமக் கூட்டம் மற்றும் தேசியக் கருத்தரங்கம்




40ஆவது இந்தியக் கால்நடை மருத்துவ அறுவைச் சிகிச்சை நிபுணர்களின் குழுமக் கூட்டம் மற்றும் "திசு சீரமைப்பிற்கான ஸ்டெம் செல் மற்றும் உயிர்ப் பொருள்கள் மற்றும் கால்நடை மருத்துவ அறுவைச் சிகிச்சையில் மறுசீரமைப்பு" குறித்த தேசியக் கருத்தரங்கம், சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் கால்நடை மருத்துவ அறுவைச் சிகிச்சை மற்றும் ஊடுகதிரியக்கவியல் துறையால் 02.12.2016 முதல் 04.12.2016 வரை நடத்தப்பட்டது. தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் திருமதி டாக்டர் எஸ். கீதாலக்ஷ்மி அவர்கள் தலைமை விருந்தினராகக் கலந்து கொண்டு விழாவைத் துவக்கிவைத்தார். அவர் உரையாற்றுகையில் தமிழக அரசின் பல்வேறு நலப்பணிகள் குறித்தும் ஆதாரச் செல் மற்றும் மறுசீரமைப்பு மருத்துவத்திற்காக அமைக்கப்படும் ஜிஎம்பி வசதி குறித்தும் பாராட்டினார். நம் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் மற்றும் இந்தியக் கால்நடை மருத்துவ அறுவைச் சிகிச்சை நிபுணர்களின் குழுமத் தலைவர் முனைவர் சு. திலகர் அவர்கள் விழாவிற்குத் தலைமை வகித்து, ஆற்றிய தமது உரையில் ஆதாரச் செல், திசு பொறியியலுக்கான உயிர் அணுத்திரள்கள் மற்றும் திசு மறுசீரமைப்பு குறித்து விளக்கினார். கல்லூரி முதல்வர் முனைவர் சி. பாலசந்திரன், சிகிச்சையியல் இயக்குநர் முனைவர் இரா. ஜெயபிரகாஷ் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். காமதேனு பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சி இயக்குநர் மற்றும் இந்தியக் கால்நடை மருத்துவ அறுவைச் சிகிச்சை நிபுணர்களின் குழுமத்தின் செயலாளர் முனைவர் தீபக் பாட்டில் அவர்கள் சிறப்புரை ஆற்றினார். அமைப்புச் செயலாளர் மற்றும் கால்நடை மருத்துவ அறுவைச் சிகிச்சை மற்றும் ஊடுகதிரியக்கவியல் துறைப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் ரவி சுந்தர் ஜார்ஜ் அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். பேராசிரியர் முனைவர் ஷபி உஷாமா அவர்கள் நன்றியுரை ஆற்றினார். இந்திய முழுவதிலும் இருந்து மொத்தம் 450 பேர் பங்கேற்றனர்.

## கல்லூரி நாள், விடுதி நாள் மற்றும் விளையாட்டு நாள் விழா –2016

**நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்:** நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் கல்லூரி நாள் மற்றும் விடுதி நாள் விழா 22.12.2016அன்று கொண்டாடப்பட்டது. பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் விழாவிற்குத் தலைமை வகித்து, தலைமையுரை ஆற்றினார். அவர் தம் உரையில் சிகிச்சை வளாகத்தைப்




பல்சிறப்புக் கால்நடைப் பயிற்றுவிப்பு வளாகமாக மாற்ற நிலம் ஒதுக்கீடு செய்யும்படி மாவட்ட ஆட்சியரிடம் கேட்டுக்கொண்டார். மேலும், சி.டி. ஸ்கேன் வசதியுடன் கல்லூரியின் சிகிச்சை வளாகம் மேம்படுத்தப்பட உள்ளது என்றும் குறிப்பிட்டார். விழாவில் நாமக்கல் மாவட்ட ஆட்சியர் திருமதி ஆசிய மரியம் அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு, சிறப்புரை ஆற்றிக் கல்லூரியில் முதல் மதிப்பெண் பெற்ற மாணவர்களுக்கும் நாட்டுநலப் பணித்திட்டத்தில் சிறந்து விளங்கிய தன்னார்வலர்களுக்கும் பரிசுகளை வழங்கினார். மருத்துவர் பிரியா மற்றும் மருத்துவர் புன்னகையரசி ஆகியோர் முறையே இளநிலை மற்றும் முதுநிலைப் பட்டப் படிப்புகளில் முதல் மதிப்பெண் பெற்றனர். கல்லூரி முதல்வர் முனைவர் இல. குணசீலன் அவர்கள் கல்லூரி ஆண்டறிக்கை வாசித்தார். விடுதிக் காப்பாளர் முனைவர் ஜி. பொன்னுதுரை அவர்கள் விடுதி ஆண்டறிக்கையை வாசித்தார். மாணவர் மன்றத் துணைத் தலைவர் முனைவர் கே.எம். பழனிவேல் அவர்கள் வரவேற்புரையாற்றினார். இறுதி ஆண்டு மாணவர் பிரதிநிதி செல்வன் ஜெ. மதியழகன் நன்றியுரை ஆற்றினார். 21.12.2016 அன்று நடைபெற்ற கல்லூரியின் விளையாட்டு விழாவில் நாமக்கல் மாவட்டப் பொருளாதாரக் குற்றப் பிரிவின் காவல் துறைத் துணைக் கண்காணிப்பாளர் திரு.பி.கே. இராஜேந்திரன் அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றி, வெற்றிபெற்ற மாணவர்களுக்குப் பரிசுகளை வழங்கினார். தடகளப் போட்டியில் ஆடவர் பிரிவில் முதலாம் ஆண்டு மாணவர் கோபி மற்றும் மகளிர் பிரிவில் மூன்றாம் ஆண்டு மாணவி எம். பிரியா ஆகியோர் ஒட்டுமொத்த வாகையர் பட்டத்தை வென்றனர். விழாவின் நிறைவாக மாணவ மாணவிகளின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

**திருநெல்வேலி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்:** 30.12.2016அன்று கொண்டாடப்பட்ட திருநெல்வேலி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் கல்லூரி நாள் மற்றும் விடுதி நாள் விழாவிற்குப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர்



அவர்கள் தலைமை வகித்துத் தலைமையுரை ஆற்றினார். அவர் தமது உரையில் பல்கலைக்கழகத்தின்கீழ் செயல்படும் நான்கு கல்லூரிகளிலேயே இக்கல்லூரியின் மாணவர்கள் முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் ஆண்டு பல்கலைக்கழகத் தேர்வுகளில் அதிக மதிப்பெண் பெற்றதற்காகக் கல்லூரிப் பேராசிரியர்கள் மற்றும் மாணவர்களைப் பாராட்டினார். மேலும், வேளாண் சமூகத்தினருக்கு அர்ப்பணிப்புடன் சேவையாற்ற வேண்டும் என மாணவர்களை ஊக்கப்படுத்தினார். திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் முனைவர் மு. கருணாகரன் இ.ஆ.ப. அவர்கள் விழாவில் பங்கேற்று, தமிழ் மன்றப் போட்டி மற்றும் கலாச்சாரப் போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கினார். கல்லூரி முதல்வர் முனைவர் மா. திருநாவுக்கரசு அவர்கள் கல்லூரி மற்றும் விடுதி ஆண்டறிக்கை வாசித்தார். கல்லூரியின் கால்நடை நுண்ணுயிரியல் துறைப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் ஜெ. ஜான்சன் ராஜேஷ்வர் அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். கால்நடை உற்பத்தி மேலாண்மைத் துறைப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் எம். முருகன் அவர்கள் நன்றியுரை ஆற்றினார். கல்லூரியின் விளையாட்டு நாள் விழாவில் திருநெல்வேலி மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர் டாக்டர் க. சேவியர் ஜோதி சற்குணம் அவர்கள் பங்கேற்று மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கினார். கல்லூரியின் நான்காமாண்டு மாணவர்கள் ஒட்டுமொத்த வாகையர் பட்டம் வென்றனர். கல்லூரியின் இரண்டாமாண்டு மாணவர்கள் செல்வன் ஜெ. ஜெடிடியா காப்ரியேல் மற்றும் செல்வி சி. ஸ்ரீவித்யா தனிநபர் வாகையர் பட்டம் வென்றனர். விழா நிறைவாக மாணவர்களின் கலைநிகழ்ச்சி நடைபெற்றது.

## முத்தமிழ் விழா



நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் 20.12.2016அன்று முத்தமிழ் விழா கொண்டாடப்பட்டது. பல்கலைக்கழகப் பதிவாளர் முனைவர் பெரு. மதியழகன் அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார். நகைச் சுவைத் தென்றல் திரு. வே. செந்தில்குமரன் அவர்கள் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு "இளந்தென்றல்" மாணவர் படைப்பிதழை வெளியிட்டுப் பல்வேறு போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களுக்குப் பரிசுகளை வழங்கிச் சிறப்புரையாற்றினார். கல்லூரி முதல்வர் முனைவர் இல. குணசீலன் அவர்கள் தலைமையுரை ஆற்றினார். தமிழ் மன்ற அமைப்பாளர் முனைவர் வீ. இரமேஷ் அவர்கள் மன்ற அறிக்கை வாசித்தார். இளந்தென்றல் இதழின் ஆசிரியர் செல்வன் பா. அன்பரசு முகவுரை வழங்கினார். முன்னதாக, தமிழ் மன்ற மாணவர் செயலர் செல்வன் நா. தினேஷ் குமார் வரவேற்புரை ஆற்றினார். இறுதியாகத் தமிழ் மன்றச் செயலர் செல்வி இரா. யாழினிதேவி நன்றியுரை ஆற்றினார். விழாவில் கல்லூரிப் பேராசிரியர்கள், பணியாளர்கள் மற்றும் மாணவர்கள் பங்கேற்றனர்.

## NABL ISO / IEC 17025 ஏற்பளிப்பிற்கான நோக்குநிலைப் பயிற்சி



பல்கலைக்கழகத்தின் கால்நடை நலக்கல்வி மையம், கால்நடைத் தீவனம் மற்றும் உணவுப் பாதுகாப்புக்கான மருந்துக் கண்காணிப்பு ஆய்வகம்மூலம் "NABL ISO / IEC 17025 ஏற்பளிப்பிற்கான நோக்குநிலைப்" பயிற்சியானது 28.12.2016 முதல் 30.12.2016 வரை நடைபெற்றது. பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் பயிற்சியினைத் துவக்கிவைத்துப் பயிற்சிக் கையேட்டினை வெளியிட, தொலைநிலைக் கல்வி இயக்குநர் முனைவர் ச.அ. அசோகன் அவர்கள் பெற்றுக்கொண்டார். கால்நடை நலக்கல்வி மைய இயக்குநர் முனைவர் பி.ஐ. கணேசன் அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். ஆராய்ச்சி இயக்குநர் முனைவர் தி.ஜெ. ஹரிகிருஷ்ணன், ஜப்பான் பாலிமர் ஆராய்ச்சி ஆய்வக இயக்குநர் முனைவர் சி. அன்புச்செல்வம் ஆகியோர் பாராட்டுரை வழங்கினர். கால்நடைத் தீவனம் மற்றும் உணவுப் பாதுகாப்புக்கான மருந்துக் கண்காணிப்பு ஆய்வகப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் ஜி. சரத்சந்திரா அவர்கள் நன்றியுரை வழங்கினார். பயிற்சியில் NABL ஏற்பளிப்பு பெற்ற பல்வேறு ஆய்வகங்களை மற்றும் நம் பல்கலைக்கழகத்தின் ஆய்வகங்களைச் சார்ந்த மொத்தம் 25 பேர் கலந்துகொண்டனர். பயிற்சியின் நிறைவு விழாவில் பல்கலைக்கழகத்தின் பதிவாளர் முனைவர் பெரு. மதியழகன் அவர்கள் நிறைவுரை ஆற்றிப் பயிற்சி பெற்றவர்களுக்குச் சான்றிதழ்களை வழங்கினார். இந்நிகழ்வில் ஆராய்ச்சி இயக்குநர் முனைவர் தி.ஜெ. ஹரிகிருஷ்ணன், பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் ஜி. சரத்சந்திரா ஆகியோர் உடனிருந்தனர்.

## கால்நடை மருத்துவர்களுக்குப் பயிற்சி

- சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் சிகிச்சைத் துறைமூலம் கேரள மாநிலக் கால்நடை மருத்துவக் கழகத்தின் நிதியுதவியில் "களப்பணிக் கால்நடை மருத்துவர்களுக்குச்



சிறிய அசைபோடும் பிராணிகள்" குறித்த ஆறு நாள் பயிற்சி, இரு தொகுதிகளாக 21.11.2016–26.11.2016 மற்றும் 12.12.2016–17.12.2016ஆம் நாள்களில் நடைபெற்றது. கேரளக் கால்நடைப் பராமரிப்புத் துறையைச் சார்ந்த 18 களப் பணிக் கால்நடை

மருத்துவர்கள் பயிற்சியில் பங்கேற்றனர். பயிற்சியின் நிறைவு விழாவில் கல்லூரி முதல்வர் முனைவர் சி. பாலசந்திரன், சிகிச்சையியல் இயக்குநர் முனைவர் இரா. ஜெயபிரகாஷ் ஆகியோர் பங்கேற்றனர்.

- நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் கால்நடைச் சிகிச்சைத் துறையில் "சிறிய பிராணிகள் இதய மின் ஒலி ஆய்வு" குறித்த பயிற்சி 01.12.2016 மற்றும் 02.12.2016ஆம் நாள்களில் நடத்தப்பட்டது. பயிற்சியில் தில்லி, பெங்களூரு மற்றும் மங்களூரு பகுதிகளிலிருந்து நான்கு கால்நடை மருத்துவர்கள் பங்கேற்றனர். கல்லூரி முதல்வர் முனைவர் இல. குணசீலன் அவர்கள் நிறைவுரை ஆற்றிப் பங்கேற்பாளர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கினார்.
- சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் விலங்கின மரபியல் மற்றும் இனவிருத்தித் துறையில் மாடுகளில் "குரோமோசோம் பகுப்பாய்வு, மரபுசார்ந்த நோய்களைக் கண்டறிதல் மற்றும் பெற்றோர்–சந்ததி ஊர்ஜிதம் செய்தல்" பற்றிய பயிற்சி 21.11.2016 முதல் 24.11.2016 வரை நடைபெற்றது. பயிற்சியில் கேரளக் கால்நடை அபிவிருத்தி முகமையைச் சார்ந்த அலுவலர்கள் பங்கேற்றனர். பயிற்சியின் முடிவில் கல்லூரி முதல்வர் முனைவர் சி. பாலசந்திரன் அவர்கள், பயிற்சி பெற்றவர்களுக்குச் சான்றிதழ் வழங்கி பயிற்சி நிறைவுரையாற்றினார்.

### செயற்கைமுறைக் கருவூட்டல் பயிற்சி

**நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்:** தேசியக் கால்நடை இனவிருத்தித் திட்டத்தின் கீழ் தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகமையின் நிதி உதவியுடன் கல்லூரியின் கால்நடை இனப்பெருக்கம் மற்றும் ஈனியல் துறையில் "மாடுகளில் செயற்கைமுறைக் கருவூட்டல் பயிற்சி" 5 பிரிவுகளாகச் செப்டம்பர் 2016 முதல் டிசம்பர் 2016வரை நடத்தப்பட்டது. பயிற்சியின் நிறைவு விழாவில் கல்லூரி முதல்வர் முனைவர் இல. குணசீலன் அவர்கள் பயிற்சி பெற்றவர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கினார்.மொத்தம் 125 வேலைவாய்ப்பு இல்லாத கிராமப்புற இளைஞர்கள் பயிற்சியால் பயன்பெற்றனர்.

**ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்:** கல்லூரியின் கால்நடை இனப்பெருக்கவியல் மற்றும் ஈனியல் துறையில் "செயற்கை முறைக் கருவூட்டல் மற்றும் கருத்தரித்தல் கண்டறிதல்" குறித்த பயிற்சி, 02.11.2016 முதல் 01.12.2016 வரை நடத்தப்பட்டது. பயிற்சியில் தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், கரூர், ஈரோடு, திருவண்ணாமலை, வேலூர், அரியலூர், காஞ்சிபுரம் மற்றும் புதுக்கோட்டை



மாவட்டங்களைச் சார்ந்த 40 வேலைவாய்ப்பு இல்லாத கிராமப்புற இளைஞர்கள் பங்கேற்றுப் பயனடைந்தனர்.

### பயிலரங்கு



காட்டுப்பாக்கம், கால்நடை அறிவியல் முதுகலை ஆராய்ச்சி நிலையமும் தமிழ்நாடு அரசின் உயர்கல்வித் துறையின் அறிவியல் நகரமும் இணைந்து கிராமப்புற மக்கள், தொழில்முனைவோர் மற்றும் பண்ணையாளர்களின் நலனுக்காக "கிராமப்புற ஏழை மக்களின் சமூக பொருளாதார மேம்பாட்டிற்கு அறிவியல்" குறித்த மூன்று நாள் பயிலரங்கை 02.11.2016 முதல் 04.11.2016வரை நடத்தின. "மதிப்புக் கூட்டிய பாலில் அறிவியல் முன்னேற்றம்" குறித்த முதல் நாள் பயிலரங்கில் மொத்தம் 30 பண்ணையாளர்கள் பங்கேற்றனர். பயிலரங்கில் கோடுவெளி, உணவு மற்றும் பால்வளத் தொழில்நுட்பக் கல்லூரியின் முதல்வர் முனைவர் டி. பாஸ்கரன் அவர்கள் பங்கேற்று, கையேடு வெளியிட்டுத் தலைமையுரை ஆற்றினார். அறிவியல் நகரத்தின் அறிவியல் அலுவலர் டாக்டர் ஜெ. தேவசேனாபதி அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். மொத்தம் 22 பண்ணையாளர்கள் பங்கேற்ற "சுத்தமான முறையில் இறைச்சியை மதிப்புக் கூட்டல்" குறித்த இரண்டாவது நாள் பயிலரங்கில் பல்கலைக்கழகத்தின் விரிவாக்கக் கல்வி இயக்குநர் முனைவர் நி.கு. சுதீப்குமார் அவர்கள் பயிற்சிக் கையேடு வெளியிட்டுத் தலைமையுரை ஆற்றினார். "பண்ணைக் கழிவுகளின் மேலாண்மைக்கு அறிவியல் முறைகள்" குறித்த மூன்றாவது நாள் பயிலரங்கில் மொத்தம் 36 பண்ணையாளர்கள் கலந்துகொண்டனர். இப் பயிலரங்கைப் பல்கலைக்கழகத்தின் கால்நடை உற்பத்திக் கல்வி மைய இயக்குநர் முனைவர் வே. ரமேஷ் சரவணகுமார் அவர்கள் துவக்கிவைத்துப் பயிலரங்கக் கையேடு வெளியிட்டுத் தலைமையுரை ஆற்றினார்.

### கால்நடை நலம் பேணுநர் குறித்த செயல்திறன் பயிற்சி



தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் நிதியுதவியிலான "கால்நடை மற்றும் கோழி வளர்ப்பில் செயல்திறன் மேம்பாட்டுத் தொழில் பயிற்சி" என்ற திட்டத்தின்கீழ் "விலங்கு நலம் பேணுநர்" பயிற்சி, 20 பங்கேற்பாளர்களுக்காகச் சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் சிகிச்சைத் துறையில் 23.11.2016முதல் 22.12.2016வரை நடைபெற்றது. 22.12.2016அன்று நடைபெற்ற பயிற்சியின் நிறைவு விழாவில்

கால்நடை உற்பத்திக் கல்வி மைய இயக்குநர் முனைவர் வே. ரமேஷ் சரவணகுமார் அவர்கள் பங்கேற்று, பயிற்சி பெற்றவர்களுக்குச் சான்றிதழ் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் தொலைநிலைக்கல்வி இயக்குநர் முனைவர் ச.அ. அசோகன் அவர்கள் உடனிருந்தார். கல்லூரியின் கால்நடைச் சிகிச்சைத் துறைப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் செசிலியா ஜோசப் அவர்கள் பயிற்சியை ஒருங்கிணைத்து நடத்தினார்.

## பயிற்சி

- திருநெல்வேலி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் கால்நடைப் பராமரிப்பு விரிவாக்கக் கல்வித் துறைமூலம் கோழியின மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் “இறைச்சிக் கோழி வளர்ப்பு” பயிற்சி, 27.12.2016 முதல் 29.12.2016வரை நடைபெற்றது. கல்லூரி முதல்வர் முனைவர் மா. திருநாவுக்கரசு அவர்கள் பயிற்சி பெற்றவர்களுக்குச் சான்றிதழ் வழங்கினார். மொத்தம் 19 பண்ணையாளர்கள் பயன்பெற்றனர்.
- காஞ்சிபுரம், உழவர் பயிற்சி மையமானது பெங்களூரு, மத்திய கோழியின அபிவிருத்தி அமைப்பு மற்றும் பயிற்சி நிறுவனத்துடன் இணைந்து காஞ்சிபுரம் மாவட்டத்தின் கோழி வளர்ப்புத் தொழில்முனைவோருக்காக “கோழி வளர்ப்பு” பயிற்சியை 26.12.2016 முதல் 31.12.2016 வரை நடத்தியது. பயிற்சியில் 45 பண்ணையாளர்கள் பங்கேற்றனர். பயிற்சியின் நிறைவு விழாவில் மத்திய கோழியின அபிவிருத்தி அமைப்பு மற்றும் பயிற்சி நிறுவனத்தின் துணை இயக்குநர் மற்றும் ஆலோசகர் மருத்துவர் வி. கிருஷ்ணன் அவர்கள் பயிற்சி பெற்றவர்களுக்குச் சான்றிதழ் வழங்கினார்.
- பல்கலைக்கழகமும் மத்திய கோழியின அபிவிருத்தி அமைப்பு மற்றும் பயிற்சி நிறுவனமும் இணைந்து தொழில்முனைவோருக்கான கோழி வளர்ப்புப் பயிற்சியை ஒரத்தநாடு, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் கால்நடைப் பண்ணைப் பயிலக வளாகத்தில் 05.12.2016 முதல் 10.12.2016 வரை நடத்தின. பயிற்சியினைக் கல்லூரி முதல்வர் முனைவர் க.ந.செல்வகுமார் அவர்கள் துவக்கிவைத்தார். பயிற்சியில் 65 பேர் பங்கேற்றுப் பயனடைந்தனர்.

## புத்தாக்கப் பயிற்சி




பல்கலைக்கழகத்தின் விரிவாக்கக் கல்வி இயக்ககத்தின் மூலம் பல்கலைக்கழகத்தின் நிர்வாக மற்றும் அலுவலகப் பணியாளர்களுக்காக “அலுவலக நிர்வாகம் மற்றும் கணக்கிடுதல் நடைமுறைகள்” குறித்த புத்தாக்கப் பயிற்சி, 3 தொகுதியாகச் சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியில் 14.12.2016 – 16.12.2016 மற்றும் 21.12.2016–23.12.2016ஆம் தேதிகளிலும், நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் 27.12.2016–29.12.2016ஆம் தேதிகளிலும் நடைபெற்றது. பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் பயிற்சியைத் துவக்கிவைத்து, “சிறந்த நிர்வாகம்” குறித்துக் கருத்துரை வழங்கினார். அவர் தம் உரையில் அன்றாடம் நடைபெறும் பல்வேறு அலுவலக நடைமுறைகளை மேற்கோள் காட்டி, தவறிழைக்காத சிறந்த நிர்வாகம் மற்றும் கணக்கிடுதல் நடைமுறைகளை உறுதிப்படுத்த வேண்டும் என்று பயிற்சியில் பங்கேற்றவர்களைக் கேட்டுக்கொண்டார். பல்கலைக்கழகத்தின் ஓய்வுபெற்ற பேராசிரியர் முனைவர் பி.எஸ். ரஹமத்துல்லா, திரு. வி. சொக்கலிங்கம், ஓய்வுபெற்ற சென்னைப் பொதுப்பணித் துறைக் கண்காணிப்பாளர் திரு. என்.ஏ. கோப்பெருஞ்சோழன், ஓய்வுபெற்ற பல்கலைக்கழக நிர்வாக அலுவலர்கள் திரு. பிரான்சிஸ் செல்வராஜ் மற்றும் திருமதி பாத்திமா பானுமதி, கணக்கு அலுவலர் திருமதி கனகா ஆகியோர் விரிவுரை வழங்கினர். மொத்தம் 114 நிர்வாகப் பணியாளர்கள் பங்கேற்றனர்.

## விழிப்புணர்வு நிகழ்ச்சி

- சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் கால்நடைப் பராமரிப்புப் பொருளியல் துறையும் அடிப்படை அறிவியல் புலமும் இணைந்து பணமில்லாப் பரிமாற்றத்தின் இன்றியமையாமையை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு உணர்த்துவதற்காகப் பணமில்லாப் பரிமாற்றம் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சியை 22.12.2016அன்று கல்லூரியில் நடத்தின. நிகழ்ச்சியில் பங்கேற்ற யூனியன் பாங்க் ஆஃப் இந்தியாவின் மண்டல அலுவலகத்தின் அலுவலர்கள் திரு. சடகோபன், திரு. டேவிட், திருமதி பிம்தி, திரு.



சீனிவாசன் ஆகியோரைக் கொண்ட குழுவினர் பணமில்லாப் பரிமாற்றம் குறித்து விரிவுரை மற்றும் செயல்முறை விளக்கம் அளித்தனர். அடிப்படை அறிவியல் புல முதல்வர் முனைவர் கா. குமணன் அவர்கள் “பணமில்லாப் பரிமாற்றம்” குறித்து துவக்கவுரை ஆற்றினார். கல்லூரி முதல்வர் முனைவர் சி. பாலசந்திரன், சிகிச்சையியல் இயக்குநர் முனைவர் இரா. ஜெயபிரகாஷ் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். மொத்தம் 150 முதுநிலைப் பட்ட மாணவர்கள் மற்றும் 25 ஆசிரியர்கள் நிகழ்ச்சியில் கலந்துகொண்டனர்.

- திருநெல்வேலி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்மூலம் கிராமத் தத்தெடுப்புத் திட்டத்தின்கீழ் “குடற்புழு நீக்கம் மற்றும் ஒட்டுண்ணி நோய்கள் தொடர்பான கண்காட்சி” குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி, துலுக்கர்குளம் கிராமத்தில் 22.12.2016அன்று நடைபெற்றது. கல்லூரி முதல்வர் முனைவர் மா. திருநாவுக்கரசு அவர்கள் நிகழ்ச்சியைத் துவக்கிவைத்தார். மொத்தம் 260 கால்நடைகளுக்குக் குடற்புழு நீக்கம் செய்யப்பட்டது. நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளைக் கல்லூரியின் கால்நடைப் பராமரிப்பு விரிவாக்கக் கல்வித் துறை செய்தது.

- சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் கால்நடைப் பராமரிப்பு விரிவாக்கக் கல்வித் துறைமூலம் ''கால்நடை மற்றும் கோழிப் பராமரிப்பு'' குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி, சென்னை ஸ்ரீநிவாசா சேவை அறக்கட்டளையுடன் இணைந்து



வீரராகவபுரம் கிராமத்தில் 28.12.2016அன்று நடத்தப்பட்டது. நிகழ்ச்சியில் பண்ணையாளர்களுடன் இளநிலை மற்றும் முதுநிலைப் பட்ட மாணவர்கள் கலந்துரையாடினர். மொத்தம் 75 பண்ணையாளர்கள் பங்கேற்றுப் பயன்பெற்றனர்.

### தங்கப் பதக்கம்

சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியில் 02.12.2016 முதல் 04.12.2016 வரை நடைபெற்ற 40ஆவது இந்தியக் கால்நடை மருத்துவ அறுவைச் சிகிச்சை சங்க மாநாட்டில் வழங்கிய சிறந்த கட்டுரைக்காக நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரியின் முனைவர் ச. தர்மசீலன், முனைவர் அ. குமரேசன், முனைவர் ச. செந்தில்குமார், முனைவர் கு. ஜெயக்குமார் ஆகியோர் ''தங்கப் பதக்கம்'' பெற்றனர்.

### கால்நடை மருத்துவச் செவிலியர் சான்றிதழ்ப் படிப்புக்கான கலந்தாய்வு




பல்கலைக்கழகத்தில் புதிதாகத் தொடங்கப்பட்டுள்ள "கால்நடை மருத்துவச் செவிலியர்" சான்றிதழ்ப் படிப்பிற்கான கலந்தாய்வு 14.12.2016அன்று நடைபெற்றது. இப் படிப்பில் 50 பேர் தேர்வு செய்யப்பட்டு, அனுமதிக்கப்பட்டனர். இப் படிப்பு புதுக்கோட்டையில் உள்ள பல்கலைக்கழகத்தின் மண்டல ஆராய்ச்சி மையத்தில் வழங்கப்படுகிறது. பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் 27.12.2016அன்று



பல்கலைக்கழகத்தின் மண்டல ஆராய்ச்சி மையத்தில் இப்படிப்பைத் துவக்கிவைத்தார்.

### பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பங்கேற்பு

குஜராத், காமதேனு பல்கலைக்கழகமும் இந்திய வேளாண் பல்கலைக்கழகங்களின் கூட்டமைப்பும் இணைந்து ''பருவநிலை மாற்றத்தில் ஆரோக்கியமான உணவு'' என்ற பொருளில் 20.12.2016 மற்றும் 21.12.2016ஆம் தேதிகளில் காந்திநகரில் நடைபெற்ற 41ஆவது துணைவேந்தர்கள் மாநாட்டில் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சு. திலகர் அவர்கள் பங்கேற்றார். மேலும், ''கால்நடைத் துறையில் (கோழியினம் உள்பட) பருவநிலை மாற்றத்தை எதிர்கொள்ளல்'' என்ற தலைப்பில் 21.12.2016அன்று நடைபெற்ற தொழில்நுட்ப அமர்விலும் துணைவேந்தர் அவர்கள் பங்கேற்று உரையாற்றினார். இவ் அமர்வில் பிகானேர், ராஜஸ்தான் கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் ஏ.கே. கெலாட், இசாட் நகர் இந்தியக் கால்நடை ஆராய்ச்சிக் கழகத்தின் துணைவேந்தர் முனைவர் ஆர்.கே. சிங், நாக்பூர், மகாராஷ்டிரா கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் ஏ.கே. மிஸ்ரா, சத்தீஸ்கர் காமதேனு பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் யு.கே. மிஸ்ரா ஆகியோர் உரையாற்றினர்.

### நாட்டுநலப் பணித் திட்டப் பணிகள்

- ஒசூர், கோழியின உற்பத்தி மற்றும் மேலாண்மைக் கல்லூரியின் நாட்டு நலப்பணித்திட்ட தன்னார்வலர்கள் 10.12.2016அன்று "மழைநீர் சேமிப்புக் குட்டையின் கரையை



வலுப்படுத்தும் பணி"யில் ஈடுபட்டனர். மேலும், ''மின்னணுப் பணப்பரிமாற்றம்'' மற்றும் ''ஒரு மாணவன் ஒரு மரம்'' குறித்து 23.12.2016அன்று நடைபெற்ற விழிப்புணர்வு நிகழ்ச்சியிலும் பங்கேற்றனர்.

- சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் நாட்டுநலப் பணித் திட்டப் பிரிவும், கல்லூரியின் உழவியல் துறையும் சுகாதாரச் சேவைப் பிரிவும் இணைந்து "வார்தா புயலுக்குப் பின் வளாகத் தூய்மைப்படுத்தல்" பணியை 17.12.2016அன்று மேற்கொண்டன. நிகழ்ச்சியைக் கல்லூரி முதல்வர் முனைவர் சி. பாலசந்திரன், பல்கலைக்கழகத்தின் நாட்டுநலப் பணித் திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் செசிலியா ஜோசப் ஆகியோர் துவக்கிவைத்தனர். மொத்தம் 150 இளநிலைப் பட்ட மாணவர்கள் தூய்மைப்படுத்தல் பணியை மேற்கொண்டனர்.

**Registered with Registrar of Newspapers for India No.TN TAM/2001/5254**
**Posted at Pathrika Channel, Egmore RMS, Chennai - 8.**

**Licensed to post without prepayment No.TN/PMG/(CCR)/WPP-708/15-17**
**Registration No.TN/TBM/32/2015-17**

Posted on 30.01.2017 at Pathrika channel, EGMORE, RMS
Date of publication : 25th and 26th of every month

Printed and Published by
Dr. S.A. Asokan, Ph.D., Director of Distance Education
on behalf of Tamil Nadu Veterinary and Animal Sciences University
and Printed at University Publication Division, Madhavaram Milk Colony,
Mathur Road, Ambathur Taluk, Tiruvallur District, Chennai - 600 051
**Editor : Dr. S.A. Asokan, M.V.Sc., Ph.D., Phone : 044-2432 0411**
**E-mail : dde@tanuvas.org.in**

## பணி ஓய்வு



சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியின் கால்நடை உற்பத்திப் பொருட்கள் தொழில்நுட்பத் துறையின் (இறைச்சி அறிவியல்) பேராசிரியர் முனைவர் கே. துஷ்யந்தன் அவர்கள் 31.12.2016அன்று பணி ஓய்வு பெற்றார். 12.12.1956இல் பிறந்த இவர் 27 ஆண்டும் 10 மாதமும் பணியாற்றியுள்ளார்.



திருநெல்வேலி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் கணக்கு அலுவலர் திரு. கே. ஹரி அவர்கள் 31.12.2016அன்று பணி ஓய்வு பெற்றார். 21.12.1958இல் பிறந்த இவர் 30 ஆண்டும் 01 மாதமும் பணியாற்றியுள்ளார்.



நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் முதல்வர் அலுவலகத்தின் ஓட்டுநர் திரு. ஆர். கந்தசாமி அவர்கள் 31.12.2016அன்று பணி ஓய்வு பெற்றார். 24.12.1958இல் பிறந்த இவர் 33 ஆண்டு பணியாற்றியுள்ளார்.



மாதவரம் பால்பண்ணை, கோழியின ஆராய்ச்சி நிலையத்தின் கோழிக் குஞ்சுப் பாலினம் அறிநர் (சிறப்பு நிலை) திருமதி துளசி கருணாகரன் அவர்கள் 31.12.2016அன்று பணி ஓய்வு பெற்றார். 08.12.1958இல் பிறந்த இவர் 32 ஆண்டும் 07 மாதமும் பணியாற்றியுள்ளார்.



காட்டுப்பாக்கம், கால்நடை அறிவியல் முதுகலை ஆராய்ச்சி நிலையத்தின் உடனாள் (சிறப்பு நிலை) திரு. சி. கிருஷ்ணசாமி அவர்கள் 31.12.2016அன்று பணி ஓய்வு பெற்றார். 08.12.1956இல் பிறந்த இவர் 32 ஆண்டும் 03 மாதமும் பணியாற்றியுள்ளார்.

## முக்கிய பல்கலைக்கழக நிகழ்வுகள்

| | |
|---|---|
| பல்கலைக்கழக அதிகாரிகள் கூட்டம் | : 08.12.2016 |
| துறைகளின் ஆய்வுக் கூட்டம், திருநெல்வேலி கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் | : 09.12.2016 |
| பல்கலைக்கழகப் பயிற்சி மையங்களின் ஆய்வுக் கூட்டம், நாமக்கல் வேளாண் ஆராய்ச்சி நிலையம் | : 29.12.2016 |

## அறிவிப்பு

சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரியில் 8 ஏப்ரல் 2017அன்று நடைபெறும் **பல்கலைக்கழகத்தின் முன்னாள் மாணவர்கள் சந்திப்பு – 2017**இல் பங்கேற்க உங்களை அழைப்பதில் பல்கலைக்கழகத்தின் முன்னாள் மாணவர்கள் சங்கம் பெருமையடைகிறது.

உங்களுடன் படித்தவர்கள் மற்றும் நண்பர்களுக்கு மாணவர்கள் சந்திப்பைத் தெரியப்படுத்தி நிகழ்ச்சி வெற்றியடையச் செய்யுங்கள்.

உங்களுக்குத் தேவையான வசதிகளைச் செய்ய (tanuvasalumni@tanuvas.org.in) என்ற முகவரிக்கு மின்னஞ்சல் செய்து உங்கள் வருகையை உறுதிப்படுத்துங்கள். பல்கலைக்கழகத்தின் முன்னாள் மாணவர்கள் சந்திப்பு – 2017க்கான பதிவுக் கட்டணம் தனிநபர் ஒருவருக்கு ரூபாய் 300/– (ரூபாய் முந்நூறு மட்டும்). மேலும் தகவலுக்கு www.tanuvas.ac.in. என்ற இணையதள முகவரியைக் காணுங்கள்.

கூடுதல் தகவலுக்குப் பின்வருபவர்களைத் தொடர்புகொள்க:

முனைவர் வி. அப்பாராவ், பொதுச் செயலாளர், **+919444527875, Email: apparao.v@tanuvas.ac.in**

முனைவர் பி. ஸ்ரீராம், பொருளாளர், **+919840983994, Email: sriram.p@tanuvas.ac.in**

முனைவர் டி.ஏ. கண்ணன், இணைச் செயலாளர், **+919841565079, Email: kannan.t.a@tanuvas.ac.in**

## பதிப்புக் குழு

**முதன்மை ஆசிரியர்**
முனைவர் சு. திலகர், துணைவேந்தர்
தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்

**ஆசிரியர்**
முனைவர் ச.அ. அசோகன்
தொலைநிலைக்கல்வி இயக்குநர்

**உறுப்பினர்கள்**
முனைவர் க. குலசேகர்
முனைவர் ஜி. சரத்சந்திரா
முனைவர் பா. டென்சிங் ஞானராஜ்
முனைவர் சி. மணிவண்ணன்
மருத்துவர் அ. ஷ்யாம் பாபு
முனைவர் அ. மணிவண்ணன்
முனைவர் பா. மதுகேஸ்வரன்